**பக்கம் எண்.1**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 72/2025**

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ம் நாள் வியாழன் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **அனிதா** | **தொழில் :** | வீட்டு குடித்தனம் |
| கணவர் **பெயர் :** | **லேட். பரசுராமன்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | வெண்டாக்கோட்டை | **வயது** | 45 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**20.11.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். வாதி என் மகன். என் மகன் பெயரில் வழக்கு சொத்து தான பத்திரம் பதிவு செய்து நான் கார்டியனாக நியமிக்கப்பட்டுள்ளேன். அவர் மைனர் என்பதால் அவருக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 10.11.2004 ல் வாதி தாத்தா சிங்காரவேலு மற்றும் அவரது சகோதரர் ரெங்கநாதன் செய்துகொண்ட கனினி பாக பத்திரம் **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 03.12.2024 ல் வாதி தாத்தா சிங்காரவேலு வாதிக்கு எழுதிக்கொடுத்த கனினி செட்டில்மெண்ட் ஆவணம் **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். 04.01.2025 தேதியிட்ட பட்டா எண்.1477 க்கான கனினி சிட்டா **வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். வழக்கு சொத்தின் கனினி வழிகாட்டி மதிப்பு **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.